

துணை முதலமைச்சரும், தமிழ்நாடு பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் புரவலருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.8.2025) சென்னை காமராசர் சாலையில் உள்ள பாரத சாரண, சாரணியர் இயக்க தலைமையகத்தில் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்ட பெருந்திரளணிக் கூடத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தரமோகன், உள்பட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.8.2025) சுதந்திர தினத்தை முன்னிட்டு, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற பொது விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஏழை, எளிய மக்களுக்கு வேட்டி, புடவைகளை வழங்கினார். இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், நிலைக் குழுத்தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டல குழுத்தலைவர் எஸ். மதன்மோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, மாமன்ற உறுப்பினர் ஏஆர்பி.எம். காமராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு,

# திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் சமத்துவ விருந்து!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று சிறப்பித்தார்!

**சென்னை, ஆக.16-**

**இந்திய திருநாட்டின் சுதந்திர தினத்தை முன்னிட்டு, இந்து சமய அறநிலையத்துறை சார்பில் திருக்கோயில்களில் ஆண்டுதோறும் சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்து நிகழ்ச்சி ஏற்பாடு செய்து நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் நேற்று (15.08.2025) 79-வது இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு சென்னையிலுள்ள முக்கிய திருக்கோயில்களில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்து நிகழ்ச்சிகளில் துணை முதலமைச்சர், சட்டப்பேரவைத் தலைவர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.**

சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் இன்று நடைபெற்ற சமத்துவ விருந்து நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்களும் கலந்து கொண்டு பொதுமக்களோடு அமர்ந்து உணவு அருந்தினர். அதனைத் தொடர்ந்து துணை முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய மக்களுக்கு வேட்டி, சேலைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலைத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக் குழுத் தலைவர் என்.சிற்றரசு, மாநகராட்சி மண்டல குழு தலைவர் எஸ்.மதன்மோகன், மாநகராட்சி மன்ற உறுப்பினர் காமராஜ், இணை ஆணையர் திருமதி கி. ரேணுகாதேவி, திருக்கோயில் செயல் அலுவலர் / துணை ஆணையர் திருமதி சி.நித்யா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், இராயப்பேட்டை, சித்தி புத்தி விநாயகர் திருக்கோயிலில் சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்களும், அடையாறு, அனந்தபத்மநாப சுவாமி திருக்கோயிலில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களும், திருவான்மியூர், மருந்தீசுவரர் திருக்கோயிலில் வேளாண்மை – உழவர்நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களும், பெசன்ட் நகர், மகாலட்சுமி திருக்கோயிலில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களும், வடபழநி, வடபழநி ஆண்டவர் திருக்கோயிலில் நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களும், வேளச்சேரி அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்களும் சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திருவட்டீஸ்வரன் பேட்டை, திருவட்டீஸ்வரர் திருக்கோயிலில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்களும், பாரிமுனை காளிகாம்பாள் திருக்கோயிலில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களும், திருவான்மியூர், பாம்பன் சுவாமி திருக்கோயிலில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களும், தேனாம்பேட்டை, பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களும், கோயம்பேடு, அருள்மிகு குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலில் சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன் அவர்களும், திருவொற்றியூர், தியாகராஜசுவாமி திருக்கோயிலில் மீன்வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களும்,

மாங்காடு காமாட்சி அம்மன் திருக்கோயிலில் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் அவர்களும், சென்னை கச்சாலீஸ்வரர் திருக்கோயிலில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் அவர்களும், பாடி திருவல்லீஸ்வரர் திருக்கோயிலில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களும், சைதாப்பேட்டை காரணீஸ்வரர் திருக்கோயிலில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்களும், கே.கே. நகர் சக்தி விநாயகர் திருக்கோயிலில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அவர்களும், சென்னை ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ். எஸ்.சிவசங்கர் அவர்களும், வில்லிவாக்கம் சௌமிய தாமோதர பெருமாள் திருக்கோயிலில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன் அவர்களும், அமைந்தகரை ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் தேவைகள் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்களும்,

திருவேற்காடு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் அவர்களும், மயிலாப்பூர் முண்டக கன்னியம்மன் திருக்கோயிலில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களும், மயிலாப்பூர் மாதவப் பெருமாள் திருக்கோயிலில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சி.வீ. மெய்யநாதன் அவர்களும், மேற்கு தாம்பரம் செல்வ விநாயகர் மற்றும் கோதண்டராமர் திருக்கோயிலில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன் அவர்களும், சிந்தாதிரிப் பேட்டை ஆதிபுரீஸ்வரர் மற்றும் ஆதிகேசவ பெருமாள் திருக்கோயிலில் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் மற்றும் அரசு தலைமை கொறடா க.இராமச்சந்திரன் அவர்களும், பூங்கா நகர் முத்துக்குமாரசுவாமி திருக்கோயிலில் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்களும்,

கீழ்பாக்கம் பாதாள பொன்னியம்மன் திருக்கோயிலில் ஆதிராவிட நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அவர்களும், சென்னை சென்னமல்லீஸ்வரர் திருக்கோயிலில் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்களும், சென்னை அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி அவர்களும், மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயிலில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு அவர்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்தில் பங்கேற்று சிறப்பித்தனர்.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, கவரைப்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற 79 வது சுதந்திர தின விழாவில் முன்னாள் மாவட்ட செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினர், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் பங்கேற்று தேசிய கொடியேற்றி வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். உடன் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, கே.ஜி.நமச்சிவாயம், பா.செ.குணசேகரன், இரா.அறிவழகன், மு.பாஸ்கர், எம்.கேசவன், மோ.பிரசாத், எம்.அருள், ப.சுரேஷ், இ.எம்.ராஜேஷ், அம்பேத்கர்ராஜன், அ.மனோகரன், வழக்கறிஞர்.சிவகுமார், கே.என்.பழனி, கே.சி.ராஜா, கே.வி.நாகராஜ், லால், உங்கள்நண்பன் கஜேந்திரன், உமாபதி, சுப்பிரமணிராஜ், பி.ஆனந்தராஜ், எஸ்.கௌதம், பிரபா, தலைமை ஆசிரியர் ஐயப்பன், உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



துணை முதலமைச்சரும், தமிழ்நாடு பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் புரவலருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சுதந்திரத் திருநாளையொட்டி நேற்று (15.8.2025) சென்னை காமராசர் சாலையில் உள்ள பாரத சாரண, சாரணியர் இயக்க தலைமையகத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து, சாரண, சாரணியரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தரமோகன், உள்பட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் அதிகமானவர்கள் பங்கேற்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்திய பெண்கள் மோட்டார் சங்கம் சார்பில் சென்னையிலிருந்து இராமேஸ்வரம் தனுஷ்கோடி வரை மேற்கொள்ளும் இருசக்கர வாகனப் பேரணியை முகாம் அலுவலகத்தில் நேற்று (15.8.2025) கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் அதிகளவில் பங்கேற்க விழிப்புணர்வு:

# இந்திய பெண்கள் மோட்டார் சங்கம் சார்பில் இருசக்கர வாகனப் பேரணி!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஆக.16-**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் அதிகமானவர்கள் பங்கேற்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்திய பெண்கள் மோட்டார் சங்கம் சார்பில் சென்னையிலிருந்து இராமேஸ்வரம் தனுஷ்கோடி வரை மேற்கொள்ளும் இருசக்கர வாகனப் பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாக உருவாக்கி வருகின்றார்கள். விளையாட்டு போட்டிகளை பார்வையிடும் பார்வையாளராக இல்லாமல், அனைவரும் போட்டிகளில் பங்கேற்க செய்வதற்காக முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் - 2025 நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 19 வயதிற்குட்பட்ட பள்ளி மாணவர்களுக்கும், 25 வயதிற்குட்பட்ட கல்லூரி மாணவர்களுக்கும், 15 வயது முதல் 35 வரை பொதுப் பிரிவினருக்கும், அனைத்து வயது மாற்றுத்திறனாளிகளுக்கும், தமிழ்நாடு அரசு மற்றும் அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்கள், தமிழ்நாட்டில் பணிபுரியும் ஒன்றிய அரசு பணியாளர்கள் ஆகியோருக்கும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

மாவட்ட அளவில் 25 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மண்டல அளவில் 7 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மாநில அளவில் 37 வகையான விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

தனி நபர் போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக 1.00 இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும். குழு போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா 75 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசாக தலா 50 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக தலா 25 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும்.

37 கோடி ரூபாய் மொத்த பரிசுத் தொகை கொண்ட 2025-ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கு இணையதளம் மூலமாக பதிவுகள் நடைபெற்று வருகின்றன. முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் அனைவரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளமான https://cmtrophy.sdat.in/https://sdat.tn.gov.in வாயிலாக தனிநபர் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள முன்பதிவு நடைபெற்று வருகிறது. முன்பதிவு செய்ய கடைசி நாள் 20.8.2025ஆக நீட்டிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் கலந்துகொள்ள விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்திய பெண்கள் மோட்டார் சங்கம் சார்பில் அதனுடைய தலைவரும் சர்வதேச மோட்டார் பந்தய வீராங்கனையு மான செல்வி நிவேதா ஜெசிக்கா தலைமையில் இன்று (15.8.2025) சென்னையிலிருந்து புறப்பட்டு தாம்பரம், திண்டிவனம், விழுப்புரம், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் இராமேஸ்வரம் வழியாக தனுஷ்கோடி சென்றடைந்து மீண்டும் 17.8.2025 காலை புறப்பட்டு அன்று இரவே சென்னை வந்தடைகின்றனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.8.2025) முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் அதிகமானவர்கள் பங்கேற்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்திய பெண்கள் மோட்டார் சங்கம் சார்பில் மேற்கொள்ளும் வீரர், வீராங்கனைகளுக்கு வாழ்த்து தெரிவித்து, இருசக்கர வாகனப் பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு அரசின் சிறந்த பேரூராட்சியாக தேர்வு செய்யப்பட்ட உத்திரமேரூர் பேரூராட்சி மன்றத் தலைவர் பொன். சசிகுமார், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் விருது பெற்றதை மாவட்ட கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.விடம் காண்பித்து வாழ்த்து பெற்றார். உடன் பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரி வள்ளல், மாவட்டப் பிரதிநிதிகள் குணசேகரன், கோவிந்தராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இருந்தனர்.